**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.80/2022**

**தேதி : 28.11.2024**

**(பிவா.சா.1) – திரு.மகுடீஸ்வரன்**

**சாட்சி அழைக்கப்பட்டு, 2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை : ( 2–ம் பிரதிவாதி தரப்பில்)**

1. நான் வழக்கு 1 லக்கச் சொத்தைப் பொறுத்தவரை மட்டும் எதிர்வாதம் செய்வதாகச் சொன்னால் சரிதான். சொத்துக்களை நிலமாகத்தான் நான் கிரையம் வாங்கினேன் என்றால், பாதி தென்னந்தோப்பாக உள்ளது, பாதி நிலமாக உள்ளது. 1லக்கச் சொத்துக்களுக்கு வில்லங்கச்சான்று தாக்கல் செய்துள்ளேன். அது இணையதள நகல் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 01.11.1975 முதல் 01.12.2023 வரை நான் வில்லங்கம் பார்த்துள்ளேன் என்றால் சரியாகத் தெரியவில்லை. தாவா 1லக்கச் சொத்துக்களை 09.11.2020ம் தேதியன்று கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்தபின்பு வில்லங்கம் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். 3 முதல் 14 வரையான ஆவணங்கள் கணினி நகல்கள் என்றால் அசல் ஆவணங்களும் உள்ளது. நான் சொல்வதுபோல் அசல் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கணினி நகல்கள் அனைத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்வதற்காகத்தான் எடுத்துள்ளேன் என்றால், நான் கிரையம் செய்வதற்கு முன்பே நகல்கள் எடுத்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்தபின்பு 28.10.2022ம் தேதியன்று வங்கியில் அடமானக் கடன் பெற்றுள்ளேன் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே கடன் வாங்கிவிட்டேன்.

3. வழக்கு 1லக்கச் சொத்துக்களுக்கு 28.09.1955ம் தேதிய பாகவிஸ்தி பத்திரம்தான் மூல ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படி

கருப்புச்சாமியின் தகப்பனார் சின்னச்சாமிக்குத் தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சின்னச்சாமிகவுண்டர் இறந்த பிறகு அவரது மகன்கள் 17.04.2008 அன்று பாகவிஸ்தி ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகவிஸ்தியை படித்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் சரிதான். மேற்படி பாகவிஸ்தி பத்திரத்திற்கும், 28.09.1955 ஆம் தேதியிட்ட ஆவணத்திற்கும் இடையில் சின்னச்சாமிகவுண்டர் வேறு ஏதாவது ஆவணம் எழுதிவைத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் வில்லங்கச்சான்றில் அவ்வாறான ஆவணங்கள் இடம் பெறவில்லை.

4. நான் கிரைய வாங்கிய பி.வா.சா.ஆ.10-ல் மூல ஆவணமாக பரிவர்த்தனை ஆவணம் தான் காட்டப்பட்டுள்ளது என்றும், பாகப்பிரிவினை ஆவணம் காட்டப்படவில்லை என்றும் சொன்னால் சரியாகத் தெரியவில்லை. மேற்படி ஆவணத்தில் சின்னச்சாமிகவுண்டர் மூலம் தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்ற விபரம் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எத்தனை அயிட்டங்களாக நான் கிரையம் வாங்கினேன் என்றால் 1-வது அயிட்டச் சொத்தை மட்டும் தான் நான் கிரையம் வாங்கினேன். வழக்கு சொத்துக்கள் எந்தெந்த சர்வே எண்களில், எவ்வளவு விஸ்தீரணங்கள் உள்ளது என்றால் மொத்தம் 13-1/2 ஏக்கர். அவை எந்தெந்த சர்வே எண்களில் எத்தனை விஸ்தீரணத்தில் உள்ளது என குறிப்பிட்டு ஞாபகமில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.11.28 19:32:52 +0530